KANTON AARGAU

# அறோ மாநிலப் பாடசாலைகள்



## பெற்றோருக்கான தகவல்கள் (tamilisch)

**DEPARTEMENT**
**BILDUNG, KULTUR UND SPORT**
Abteilung Volksschule

**வெளியிடுபவர்**

Departement
Bildung, Kultur und Sport
Abteilung Volksschule
Bachstrasse 15
5001 Aarau

Tel. 062 835 21 00

E-Mail: volksschule@ag.ch
www.ag.ch/volksschule

**படங்கள்**

fotolia
Kanton Aargau

**பதிப்புரிமை**

© 2016 Kanton Aargau

# அறிமுகம்

உங்கள் முன் உள்ள இந்தத் தகவல் பிரசுரம் மூலம் அறோ மாநிலத்துப் பாடசாலைகளின் பாட நடைமுறை பற்றிய முக்கியமான தகவல்களை அறியத்தர விரும்புகிறோம். இதை அறிந்து கொள்வதனால் உங்கள் பிள்ளை விரைவில் அறோ மாநிலப் பாடசாலைக்குப் போகத் தொடங்க இருந்தாலோ, அல்லது போய்க்கொண்டு இருந்தாலோ, அதற்கு உதவியாக இருக்கும்.

அறோ மாநிலப் பாடசாலை அமைப்பை மேலோட்டமாகப் பார்த்து, அதில் முக்கியமான பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன. குறிப்பிட்டுச் சொல்லப்போனால் பல வேறுபட்ட பாடசாலைப் பகுதிகளும், பாடசாலை உபபிரிவுகளும்இ மேலதிக ஊக்குவிக்கும் செயற்பாடுகளும், தனித்தனி ஆலோசனைப் பிரிவுகளும், தொழிற்கல்விக்குரிய மேலதிக வசதிகளும், அதைத் தொடரவேண்டிய பாடசாலைகளும் தரப்பட்டுள்ளன.

முக்கியமாகப் பாடசாலையுடன் இணைந்து பெற்றோர் ஒத்துழைக்கும் போது பிள்ளைகளில் அதிக முன்னேற்றம் காணலாம். இந்த ஒத்துழைப்பு என்பது உங்களின் சொந்த முதலீடு ஆகும்.

ஒவ்வொரு பந்தியின் முடிவிலும் தேவையான இணையத்தளமுகவரி, தொலைபேசி இலக்கங்கள், தொடர்பு விலாசங்கள் தரப்பட்டிருக்கும். அதைவிட மேலதிக தகவல்களை உங்கள் பிள்ளை சிறுவர் பாடசாலையிலிருந்து பாடசாலைக்குப் போகவிருந்தால் நடக்கவிருக்கும் தகவல் நிகழ்ச்சி நேரத்தில் அறிந்து கொள்ளலாம். தனிப்பட்ட முறையில் உள்ள கேள்விகளை அங்குள்ள ஆசிரியர்களிடம், அல்லது பாடசாலை நிர்வாகத்தினரிடம் கேட்கலாம்.

உங்கள் பிள்ளைக்கு அறோ மாநிலப் பாடசாலையில் நல்ல ஆரம்பமாகட்டும். என வாழ்த்துகிறோம்.

கல்வி கலாச்சார விளையாட்டுத் திணைக்களம்
பாடசாலைப்பிரிவு

# அறோ மாநிலப் பாடசாலைகள்( Volksschule) பற்றிய கண்ணோட்டம்

அறோ மாநிலத்தில் வாழும் சிறுவர்கள்இ இளையவர்கள் அனைவரும் பாடசாலைக்குப் போவது முக்கிய கடமையாகும். இப் பாடசாலை 11 வருடங்கள் வரை எடுக்கும். 4 வயது முழுமையான சிறுவர்கள் பாடசாலைக்குப் போகத் தொடங்க வேண்டும். பாடசாலை எப்போதும் ஆகஸ்ட் மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமை தொடங்கும்.

## கட்டாயப் பாடசாலை வருடங்கள்

கட்டாயப் பாடசாலை வருடங்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

- சிறுவர் பாடசாலை (**Kindergarten**) 2 வருடங்கள் எடுக்கும்..
- ஆரம்பப் பாடசாலை (**Primarschule**) 6 வருடங்கள் எடுக்கும்..
- மேற்பிரிவு (**Oberstufe**) (Sekundarstufe I) 3 வருடங்கள் எடுக்கும். இது றியால்பாடசாலை (Realschule), செக்குன்டார் பாடசாலை (Sekundarschule) மற்றும் பெசீர்க் பாடசாலை (Bezirksschule) என மூன்று உப பிரிவுகளை உள்ளடக்கியது.

இதற்குள்ளே பிள்ளைகளின் மேலதிக தேவைகளுக்கேற்ப வேறுவிதமான பாடசாலை வகைகளும் உள்ளன. அவை சிறிய ஊக்கவகுப்பு (Kleinklasse) அல்லது அறிமுகத்தயார்வகுப்பு (Einschulungsklasse) ஆகும். அவை பற்றிய விபரங்களை தலைப்புகள் “Primarschule” மற்றும் “Oberstufe (Sekundarstufe I)”


## பிரத்தியேகப் பாடசாலை

குறைபாடுள்ள சிறுவர்கள் இளையவர்களுக்கு சிறப்பான கவனிப்புக் கொடுக்கப்படும். இந்த சிறப்பு ஊக்குவிப்புக் கவனிப்பு சாதாரண வகுப்பில் படிக்கும் குறைபாடுள்ள சிறுவர்களுக்கும்இ அல்லது சிறிய ஊக்கவகுப்பில் படிக்கும் சிறுவர்களுக்கும் வழங்கப்படும். அத்துடன் இதற்கெனப் பிரத்தியேகப்பாடசாலையும் உண்டு.

## ஊக்குவிக்கும் முறை

சுவிற்சர்லாந்தின் கல்வித்திட்டம் ஊக்குவித்தலை முன்னோடியாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் தனிப்பட்ட பாடசாலைத் திட்டங்களைக் கொண்டுள்ளது. இக் கல்வித்திட்டத்திற்கு மாநிலங்களின் (பாடசாலைச் சட்டதிட்டங்களும்) கிராமசபைகளின் முன்னெடுத்தலும் தான் பொறுப்பாக உள்ளன. தொழிற்கல்விக்கு மத்திய அரசு தான் முக்கிய பொறுப்பாகும்.

கீழுள்ள வரைபு அறோ மாநிலக் கட்டாயப் பாடசாலைகளின் நிலையைக் காட்சிப்படுத்துகிறது. இந்த வரைபின்படி கீழிருந்து மேலாகப் பாடசாலைக்குச் சேர்வதிலிருந்து பாடசாலையை விட்டு வெளியேறும்வரை காட்டப்பட்டுள்ளது.




WJ: தொழில் வருடம் (Werkjahr) (றியால் பாடசாலைப் பிள்ளைகளும், சிறிய ஊக்கவகுப்புப் பிள்ளைகளும் படிக்கக்கூடிய வகுப்பு)

BWJ:தொழில் தெரிவுசெய்யும் வருடம் (Berufswahljahr) (றியால் ,செக்குன்டார், பெசீர்க் பாடசாலையில் படித்த மாணவர்களும் சிறிய ஊக்கவகுப்பு மாணவர்களும் படிக்கக்கூடிய வகுப்பு)

IBK:உள்வாங்கல் -மற்றும் தொழில் தேட உதவும் வகுப்பு (Integrations- und Berufsfindungsklasse) (11 வது பாடசாலை வருடவகுப்பு) .இடம்பெயர்ந்தவர்கள் சுவிஸ் நாட்டிற்கு வந்து 2 வருடங்களுக்குள் இருந்து அத்துடன் சொந்தநாட்டில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பாடசாலையில் படித்திருந்தால் இங்கு படிக்கலாம்.

# பாடசாலைகளுக்குரிய முக்கியமான தகவல்கள்

**நீங்கள் புதிதாகக் குடிபெயர்ந்தால் ...**

**பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு எங்கே பதியவேண்டுமென்று, உங்கள் கிராமசபை நிர்வாகத்திடம் போய்க் கேளுங்கள். அல்லது நேரடியாக கிராமசபையிலுள்ள பாடசாலை நிர்வாகத்திடம் கேளுஙகள்.**

## பொதுவானவை

அரச பாடசாலைகளில் கட்டாய வகுப்புகளுக்குரிய செலவுகள் இலவசமாகும். அங்குள்ள கிராமசபையே மாணவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள், படிப்பித்தலுக்குரிய செலவுகள், தேவையான உபகரணங்களுக்குரிய செலவுகளையும் பொறுப்பெடுக்கும்..

பகிரங்கப்பாடசாலைகள் சமயசார்பற்றவை. இவை அரச சட்டங்களுக்குப் படுத்தப்பட்டு தனிப்பட்ட சமயநம்பிக்கைகளுக்கும், பிள்ளைகளை வளர்ப்பதற்குரிய முறைகளுக்கும் உதவுவதுடன், பெற்றோருக்குரிய தனிப்பட்ட உரிமைகளில் தலையிடவும் மாட்டாது.

ஆண் பெண் பிள்ளைகள் ஒரே வகுப்பிலிருந்து ஒன்றாகவே பயிற்றுவிக்கப்படுவார்கள்.

## பாடசாலை நிர்வாகம்

பாடசாலை கல்விப்பணிகள் அறோ மாநிலத்தில் Departement Bildung, Kultur und Sport (BKS) நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு பாடசாலைக்கும் அதற்குரிய பாடசாலை நிர்வாகமும் கிராமசபையின் கல்வி அதிகாரியுமே பொறுப்பாகும். கிராமசபையின் வாக்காளர்களால் வாக்களிக்கப்பட்டு, தெரிவுசெய்யப்பட்ட கல்வி அதிகாரியே பாடசாலை நிர்வாகத்தை தெரிவுசெய்வார்.

## தேர்ச்சி அறிக்கையும் வகுப்பேற்றமும்

சிறுவர் பாடசாலைப் பிள்ளைகளும் அவர்கள் பெற்றோரும் வருட முடிவில் ஒரு மதிப்பிடும் அறிக்கை ஒன்றைப் பெறுவார்கள். அதில் பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

ஆரம்பப் பாடசாலையின் 1 ம் வகுப்பிலும் அறிமுகத்தயார் வகுப்பிலும் படிக்கும் மாணவர்கள் அரை வருடமுடிவில் ஓர் இடைப்பட்ட அறிக்கையையும், வருடமுடிவில் எழுத்து மூலம் திறமையை மதிப்பீடு செய்த அறிக்கையையும் பெறுவார்கள்.

ஆரம்பப் பாடசாலையின் 2 ம் வகுப்பிலிருந்து மேற்பிரிவின் 3 வது வருடம் வரை படிக்கும் மாணவர்கள் அரை வருடமுடிவில் தகவல் புள்ளிகளுடன் கூடிய ஓர் இடைப்பட்ட அறிக்கையையும், வருடமுடிவில் புள்ளிகளுடன் கூடிய வருடாந்த தேர்ச்சி அறிக்கையையும் பெறுவார்கள். அதிகூடிய புள்ளி 6 ஆகக்குறைந்த புள்ளி 1.

திறமையை மதிப்பிடுதல் பற்றிய விரிவான தரவுகளை திறமையை மதிப்பிடுதலும் வகுப்பேற்றமும் அறோ பாடசாலைக்குரியது என்ற தகவல் பிரசுரத்தில் காணலாம்.

மேலதிக தகவல்களுக்கு: www.ag.ch/leistungsbeurteilung-volksschule

## ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லுதல்

பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புவது பெற்றோர்களின் அல்லது பொறுப்பானவர்களின் கடமையாகும். அது தவறுமிடத்து அதற்குப் பொறுப்பானவர்கள் அபராதப்பணம் மூலம் தண்டிக்கப்படலாம்.



## எதிர்பாராத திடீர் சமூகமளியாமை

மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்கத் தவறினால் இதற்குரிய காரணத்தைப் பெற்றோரோ அல்லது பொறுப்பானவர்களோ உடனடியாக வகுப்பாசிரியருக்குத் தெரி யப்படுத்த வேண்டும். சிலசமயம் வகுப்பாசிரியர் எழுத்து மூலமும் காரணம் கோரலாம். ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள்:

- பிள்ளைக்குச் சுகவீனம் ஏற்பட்டால்
- குடும்பத்தில் யாருக்காவது மரணம் சம்பவித்தால்

அனுமதி பெறாமல் பாடசாலைக்கு சமூகமளிக்காமை மேற்பிரிவின் (பெசீர்க், செக்குன்டார் மற்றும் றியால் பாடசாலைகளின்) இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்த தேர்ச்சியறிக்கையில் குறிக்கப்படும்.

## விலக்குதல் / விடுமுறை

அறோ மாநிலப் பாடசாலைச் சட்டப்படி பெற்றோர் மூலம் கோரப்படின் காலாண்டு காலப்பகுதிக்கு ½ நாள் விடுமுறைக்கு அனுமதி கிடைக்கும். (அதற்கு விசேட காரணம் காட்டத்தேவையில்லை). இரு தடவை வரும் ½ நாள் விடுமுறையைச் சேர்த்து அரை- யாண்டு காலப்பகுதிக்குள் 1 நாள் விடுமுறையாக எடுக்கலாம். (கல்வி அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டும)

பிள்ளைகள் பாடசாலைக்கு விலகியிருக்க வேண்டியிருப்பின் கல்விஅதிகாரியிடம் (Schulpflege) அல்லது கல்விஅதிகாரியால் நியமிக்கப்பட்ட பாடசாலை அதிபரிடம் அல்லது ஆசிரியரிடம் முற்கூட்டியே அனுமதி கேட்டு கடிதம் எழுதவேண்டும். விலகியிருத்தலுக்கான காரணங்களாக ஒழுங்காகப் பங்கெடுக்கும் விளையாட்டு நிகழ்வுகள், சமயப்பண்டிகைகள், தொழிற்பயிற்சி முகரும் நாட்கள் போன்றன அடங்கும். சிலசமயம் பிள்ளைகளின் அதிகூடிய திறமைகளைச் செயற்படுத்தும் தூண்டல்களுக்காகப் பாடசாலையிலிருந்து நீண்டநாட்கள் விலகியிருக்க நேரிடலாம்.அதை நடைமுறைப்படுத்த Departement BKS இல் அனுமதிபெறவேண்டும்.

முதலாவது சிறுவர் பாடசாலை வருடத்தில் பெற்றோர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஆகக்கூடியது கிழமைக்கு ½ நாள் பாடங்களிலிருந்து விலகி விடுப்பு எடுக்கலாம்.

## விடுமுறைத்திகதிகள்

பாடசாலை விடுமுறைத் திகதிகள் ஒவ்வொரு கிராமசபைக்கும் மாறுபடலாம்.இதற்குரிய திகதிகள் கிராமசபையினரால் பாடசாலைக்குக் கொடுக்கப்படும். அதை கீழுள்ள இணையத்தளத்தில் காணலாம்.

மேலதிக தகவல்களுக்கு: www.schulen-aargau.ch > Schulen

## பாடசாலை வைத்தியர் / பாடசாலைப் பல்வைத்தியர்

பாடசாலைக்குரிய வைத்தியப்பகுதியே பாடசாலையின் ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்ளும். அவர்கள் சிறுவர்களைச் சோதித்து கேட்டல், பார்த்தல், பேசுதலிலுள்ள குறைபாடுகளையும் மற்றும் உடல் நிலைப்பாடு, உடலசைவுகளிலுள்ள தடங்கல்களையும் உரிய நேரத்தில் கண்டறிவார்கள். அப்படி ஒரு பிள்ளைக்கு ஏதாவது குறைபாடு கண்டறியுமிடத்து பாடசாலை வைத்தியர் பிள்ளையின் பெற்றோருடன் தொடர்பு கொண்டு தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

1வது சிறுவர் பாடசாலையிலிருந்து மேற்பிரிவின் 3வது வருடம் வரையுள்ள மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு பணப்பற்றுச் சீட்டைப் பெறுவார்கள். அதன் மூலம் ஒவ்வொரு வருடமும் தாம் விரும்பும் பல் வைத்தியரிடம் சென்று தமது பற்களைச் சோதித்துக் கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கும் விபரங்களுக்கும்

உங்களுக்கு ஏதாவது கேள்விகளிருப்பின் உங்கள் பிள்ளையின் வகுப்பாசிரியரை அணுகுவது மிகவும் நல்லது.

பாடசாலை மற்றும் பாடசாலை உபபிரிவுகள் பற்றய தகவல்களை அறிந்து கொள்ள கீழுள்ள இணையத்தளத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.:
www.ag.ch/bks

சிறுவர் பாடசாலையிலிருந்து மேற்பிரிவு வரை தேவையான தகவல்களுக்கு கீழுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.:

Departement Bildung, Kultur und Sport
E-Mail: volksschule@ag.ch, தொ.பேசி 062 835 21 00



# பெற்றோர் - பாடசாலை சேர்ந்து செயற்படல்

## பாடசாலையின் கடமைகள்

பாடசாலைச் சட்டப்படி ஒரு பிள்ளை ஆரோக்கியமாக வளர்வதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் பாடசாலை முன்னெடுக்க வேண்டும். அதன் மூலம் பிள்ளைகளும் இளம்பராயத்தவர்களும் பாடசாலைக்காலத்தில் ஆரோக்கியத்தில் மாற்றமின்றி இருக்கலாம். உடலாரோக்கியமும் கூட பள்ளித்திறமைக்குரிய ஒரு நிபந்தனை ஆகும்.

உங்கள் பிள்ளையின் திறமைநிலை, மற்றும் நடக்கும் சம்பவங்கள் பற்றி ஒழுங்காகப் பெற்றோருக்கு அறிவிப்பது பாடசாலையின் கடமையாகும். அதற்காகவே பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு, பெற்றோர் மாலைநேரம், தகவல் நிகழ்ச்சி நேரம் நடைபெறும். உங்களுக்குக் கிடைத்த தகவல் போதாது எனக் கருதினால் வகுப்பாசிரியரிடமோ அல்லது பாடசாலை நிர்வாகத்திடமோ நேரடியாகக் கேட்கலாம்.

## பெற்றோருக்குரிய உரிமைகளும் கடமைகளும்

பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் சமூகமளிப்பதற்கு பெற்றோராகிய நீங்களே பொறுப்பாகும். அதைவிட பிள்ளைகளின் வீட்டுப்பாடங்களைச் செய்வித்து, போதிய ஓய்வு எடுத்த பின்பு பாடசாலைக்கு அனுப்புவதையும் பெற்றோரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது . அதற்காக பள்ளிப்பாடங்களையும், வீட்டுப்பாடங்களையும் ஒழுங்காகப் பார்வையிடுவதன் மூலம் உங்களுக்குப் பிள்ளைகளின் படிப்பிலுள்ள அக்கறையைக் காட்டும் போது பிள்ளைகளை மேலதிகமாகத் தூண்டலாம்.

கல்வி அதிகாரியிடமிருந்தோ பாடசாலையிலிருந்தோ (பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்) வரும் பெற்றோர் தகவல் நிகழ்ச்சி அல்லது பெற்றோருடனான பேச்சுவார்த்தைக்கான அழைப்புகளை கவனத்தில் கொண்டு பங்கெடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

உங்கள் பிள்ளையின் ஆசிரியருடனான தொடர்பை நன்றாகப் பேணிக்கொள்ளுங்கள். பெற்றோருக்கும் பாடசாலைக்கும் இடையேயுள்ள நெருங்கிய கூட்டுமுயற்சியால் உங்கள் பிள்ளை நல்ல பயனடையும். இதனால் பிள்ளையைச் சரியான முறையில் ஊக்கப்படுத்தலாம்.

பெற்றோர் என்ற ரீதியில் உங்கள் பிள்ளையின் பாடநேரத்தில் வகுப்பிற்குச் சென்று பார்வையிட உரிமை உண்டு. தயவுசெய்து போவதற்கு முன்பு வகுப்பாசிரியரிடம் தெரியப்படுத்துங்கள்.

முக்கியமான தீர்மானங்களாயின் அவை எடுக்கப்பட்ட முறை பற்றிக் கேட்கவோ, அதன் கோப்புகளைப் பார்வையிடவோ உங்களுக்கு உரிமையுள்ளது. இறுதித் தீர்மானம் உங்களுக்குப் பாடசாலை நிர்வாகத்தினால் காரணத்துடன் எழுத்து மூலம் அறியத்தரப்படும். இந்த முடிவுடன் நீங்கள் உடன்படாவிடின் பிரதேசப்பாடசாலைக் குழுவில் (Bezirksschulrat) முறையிடலாம். உதாரணமாகக் கீழுள்ள பிரச்சனைகள் வரலாம்.

- சிறுவர் பாடசாலை அனுமதி
- ஆரம்பப் பாடசாலையின் முதலாம் வகுப்பில் அனுமதி
- விசேட கவனிப்புக்காக அறிமுகத்தயார் வகுப்பு அல்லது ஊக்கவகுப்பில் விடுதல்
- மேற்பிரிவுக்கு வகுப்பேற்றம்
- வகுப்பேற்றம் பாடசாலை மேற்பிரிவில் உப பிரிவுகளுக்குள் மாற்றம்
- பிரத்தியேகப் பாடசாலைக்கு அனுப்புதல்

## பாடசாலைப் பிரச்சினைக்குப் பெற்றோர் யாரை அணுகவேண்டும்?

1. பிள்ளையின் ஆசிரியருடன் பேசுங்கள்.
2. பாடசாலை நிர்வாகத்தை நாடுங்கள்.
3. கல்வி அதிகாரியை நாடுங்கள்.

உங்கள் கருத்துகள் சரியானமுறையில் கவனிக்கப்படாமல் அல்லது மிகவும் குறைந்தளவில் கவனிக்கப்பட்டதாக நீங்கள் கருதினால் நாலாவது படியாக கல்வி இலாகாவை நாடுங்கள்.

தொடர்புகள்: கல்வி இலாகா (Sektion Schulaufsicht) தொ.பேசி 062 835 21 05, ஈமெயில்: sa.volksschule@ag.ch, www.ag.ch/schulaufsicht

பல்வேறு தேவைகளுக்கேற்ற ஆலோசனை நிலையங்கள் பற்றிய தகவல்களுக்கு (தலைப்பு ஆலோசனைப்பிரிவை) வாசியுங்கள்.

# சிறுவர்பாடசாலை (Kindergarten) (2வருடங்கள்)

## சிறுவர்பாடசாலைக்கு அனுமதி

சிறுவர்பாடசாலைக்குப் போவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. யூலை 31ம் [1] திகதியில் 4 வயதை முடித்த பிள்ளைகள் அதே வருடம் ஆகஸ்ட் இல் சிறுவர்பாடசாலைக்குச் செல்லத் தொடங்கலாம்.

## படிப்பிக்கும் விதங்கள்

சிறுவர்பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் முழுவளர்ச்சியும் ஊக்குவிக்கப்படும்.அங்கு பிள்ளைகள் புதிய சூழலில் தம் விருப்பத்திற்கேற்ற திறமைகளை வளர்க்க முடியும். இங்கு விளையாட்டு ரீதியாகப் பாடங்களைப் படிப்பது மட்டுமன்றி பேச்சுத்திறமைஇ கணிதம்இ உடலசைவுகள்இ மற்றவர்களுடன் சேர்ந்து பழகுவதுஇ தம் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும் முன்னேற்றம் காணமுடியும்.

பிள்ளைகள் தாமாகவே வாசிக்கஇ எழுதஇ கணக்குச் செய்யஇ அக்கறை காட்டினால் அவர்களுக்கு மேலும் உதவி கிடைக்கும். ஆனால் அது முறைப்படியான பாடத்திட்டத்திற்குள் அடங்கவில்லை. அதிகூடிய திறமையுள்ள பிள்ளை முன்கூட்டியே ஆரம்பப் பாடசாலைக்குப் போகவும் சந்தர்ப்பம் உண்டு.

வீட்டில் பிறமொழி பேசும் பிள்ளைகளுக்கு சிறுவர் பாடசாலையில் தனிப்பட்ட முறையில் டொச்மொழி பயிற்றுவிக்கப்படும்.

சிறுவர் பாடசாலையில் வளர்ச்சியில் ஏதாவது தடங்கல்கள் தென்படும் பிள்ளைகளுக்கு விசேட முறைப் பயிற்சி பெற்ற ஆசிரியரின் உதவியும் கிடைக்கும்.

---

[1] 31யூலை 2018இலிருந்து இச்சட்டம் முற்றாக அமுலுக்கு வருகிறது. அதுவரை கிராமசபை 30 ஏப்ரலிலிருந்து 31 யூலைக்கு படிப்படியாக பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கி மாற்றீடு செய்யும்..

# ஆரம்பப்பாடசாலை (Primarschule) (1- 6ம் வகுப்புவரை)

## ஆரம்பப்பாடசாலை சாதாரணவகுப்பு

ஆரம்பப்பாடசாலை 1 தொடக்கம் 6ம் வகுப்புவரை அடங்கும்.

முதலாம் வகுப்பில் வாசிப்பு எழுத்து மொழி கணக்குச் சொல்லித்தரப்படும். பிள்ளைகள் சேர்ந்து படிப்பதன் மூலம் மற்றவர்களுடன் பழகும்தன்மை ஊக்குவிக்கப்பட்டு, அவர்களின் ஆளுமையும் கூடும். அதைவிட இசை, படம் வரைதல், வண்ணம் தீட்டல் (வெட்டுதல், ஒட்டுதல், உருவம் அமைத்தல்) துணி தைத்தல், உடற்பயிற்சி விளையாட்டு என்பனவும் சொல்லித் தரப்படும். அத்துடன் இயற்கை சார்ந்த விடயங்களும் அவரவர் வயதிற்கேற்ப பகிரப்படும்.

பாடநேரங்களில் பிள்ளைகளின் திறமைகள் அவர்களுக்கு எவ்வகை ஊக்குவிப்புத் தேவை-யென்பது பற்றியும் கவனிக்கப்படும். ஆரம்பப்பாடசாலையின் நோக்கமே பிள்ளைகளை சுயமாகச் செயற்படவும் தாமே தமக்குப் பொறுப்பு ஏற்கவும் சுற்றாடலைப் பழகிக் கொள்ளுவதுமேயாகும்.

## அறிமுகத்தயார்வகுப்பு (Einschulungsklasse)

பிள்ளைகள் முதலாம் வகுப்பிற்குப் போகத் தேவையான அடிப்படைத் திறமைகள் குறையும் பட்சத்தில் இந்த அறிமுகத்தயார்வகுப்பிற்கு அனுப்பப்படுவர். இங்கு முதலாம் வகுப்பிற்குரிய ஒரு வருடப் பாடத்திட்டங்கள் இரண்டு வருடங்களுக்குப் பங்கிட்டுப் படிப்பிக்கப்பட்டு அதன்பிறகு சாதாரண இரண்டாம் வகுப்பிற்கு அனுப்பப்படுவர்.

## உள்வாங்கப்பட்ட விசேட பயிற்சி முறைக்கல்வி (Integrierte Heilpädagogik)/ சிறிய ஊக்கவகுப்பு (Kleinklasse) ஆரம்பப்பாடசாலை

அதிகமான பாடசாலைகளில் உள்வாங்கப்பட்ட விசேட பயிற்சி முறைக்கல்வி உண்டு. இதன் அர்த்தம் என்னவென்றால் சாதாரண வகுப்பிற்குப் போகும், படிப்பதில் சிரமமுள்ள பிள்ளைகளுக்கு அங்கு மேலதிகமாக விசேட பயிற்சி முறைக்கல்வியில் பயிற்றப்பட்ட ஆசிரியரால் படிப்பிக்கப்படும். தேவைப்பட்டால் ஒவ்வொருவருக்கும் ஊக்குவிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட பாடத்திட்டத்துடன் பயிற்றுவிக்கப்படும்.

குறைந்தளவு பாடசாலைகளில் தான் படிப்பதில் சிரமமுள்ள பிள்ளைகளுக்கான சிறிய ஊக்கவகுப்பு உண்டு. அங்கு பிள்ளைகளுக்கு மேலதிகமாக விசேட பயிற்சி முறைக்கல்வியில் பயிற்றப்பட்ட
ஆசிரியரால் படிப்பிக்கப்படும். இங்கு சாதாரண வகுப்பிலுள்ள பிள்ளைகளை விட குறைந்த பிள்ளைகளே படிப்பார்கள். இங்கு சாதாரண வகுப்பிலுள்ள பாடத்திட்டப்படியே பாடநோக்கம் அமைக்கப்படும்.

# மேற்பிரிவு(Oberstufe) / செக்குன்டார் பிரிவு 1 (7-9ம் வகுப்பு வரை)

மேற்பிரிவில் மூன்று வகையான உபபிரிவுகள் உள்ளன. அவை றியால் பாட-சாலை (Realschule) செக்குன்டார் பாடசாலை (Sekundarschule) மற்றும் பெசீர்க் பாடசாலை (Bezirksschule) என்பவையாகும். பிள்ளைகளின் திறமைக்கேற்ப மூன்று பிரிவுகளுக்கும் பிரித்து அனுப்பப்படுவா் இங்கு 3 வருடங்கள் படிக்கவேண்டும்.

## ஆரம்பப்பாடசாலையிலிருந்து மேற்பிரிவுக்குப் போதல் / மேற்பிரிவில் மாறுபடும் வகுப்புப்பிரிவுகள்

6ம் வகுப்பு ஆசிரியர்கள் பிள்ளைகளின் திறமைக்கேற்ப பெற்றோர்களுடன் கலந்து பேசிய பின்பே மேற்பிரிவு வகுப்பின் உபபிரிவுகள் தீர்மானிக்கப்படும். ஆசிரியர்களின் தீர்மானமும் பெற்றோர்களின் எதிர்பார்ப்பும் உடன்படாவிடின் கல்விஅதிகாரியே முடிவு செய்வார்.

பிரித்துவிட்ட வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகளின் திறமைகளில் முன்னேற்றம் காணப்படின் ஆசிரியர்களின் சிபார்சு மற்றும் கல்வி அதிகாரியின் முடிவும் சேர்ந்து பாடசாலை வருடமுடிவில் அடுத்த கூடிய பிரிவுக்கு ஏற்றிவிட வழிவகுக்கும்.



## றியால் பாடசாலை

மேற்பிரிவில் அதிகுறைந்த திறமையுள்ள பிள்ளைகள் படிக்கும் பாடசாலையாகும். இங்குள்ள பிள்ளைகள் பரந்த பொதுவான அடிப்படைக்கல்வியைக் கற்று தொழில்-சார்துறைகளுக்கு ஆயத்தம் பண்ணப்படுவார்கள்.இப்பாடசாலை முடிந்த பின்பு அதிக-மான பிள்ளைகள் கைத்தொழில் மற்றும் தொழிற்சாலைகளில் தொழில்வாய்ப்பைப் பெறுவார்கள்.

தொழில் கல்வி பயிற்சியின் போது திறமையைக்காட்டும் மாணவர்களுக்கு தொழிற்கல்விப் பாடசாலையின் மூலம் மேற்கொண்டு கற்கவும் தொழில்துறையில் மேலும் முன்னேறவும் வசதிகள் உண்டு.

## செக்குன்டார் பாடசாலை

மேற்பிரிவில் நடுத்தரத் திறமையுள்ள பிள்ளைகளின் பாடசாலை வகுப்பாகும். இங்கு படிக்கும் பிள்ளைகள் பரந்த பொதுவான கல்வியையும் தொழிற்கல்வியைக் கற்பதற்குரிய அடிப்படைக் கல்வியையும் கற்பார்கள். செக்குன்டார் பாடசாலையை முடித்தபின் குறைந்தளவு பிள்ளைகள் மட்டுமே தொழில்துறைசார் பாடசாலை (Fachmittelschule), பொருளாதாரதுறைசார் பாடசாலை (Wirtschaftsmittelschule) அல்லது தகவல்துறைசார் பாடசாலை (Informatikmittelschule) க்கு போகலாம்.

தொழில்துறைசார் பாடசாலை, பொருளாதாரதுறைசார் பாடசாலை, தகவல்துறைசார் பாடசாலை அனுமதி பெறுவதற்குரிய தகைமைகள் பற்றிய தகவல்களுக்கு தலைப்பு „Mittelschule (Sekundarschule II)" பார்க்கவும்.

## பெசீர்க் பாடசாலை

பெசீர்க் பாடசாலை அதிகூடிய திறமையுள்ள பிள்ளைகள் படிக்கும் பாடசாலை வகுப்பாகும். இங்குள்ள பிள்ளைகள் நல்ல தொழில்சார்துறைகளுக்குப் பயிலலாம். அத்துடன் மத்திய உயர்கல்விக்குப் (யிம்நாசியம் தொழில்சார்துறைக்கல்வி பொருளாதாரக்கல்வி தகவல்கல்வி) போகலாம். இதில் சித்தியடையும் அரைவாசிக்கு மேற்பட்டோர் கைத்தொழில், தொழிற்சாலை, வர்த்தகம் சம்பந்தப்பட்ட தொழி-ல்கல்விக்கும் ஏனையோர் மத்திய உயர்கல்விக்கும் செல்வார்கள்.

யிம்நாசியம், தொழில்துறைசார் பாடசாலை, பொருளாதாரதுறைசார் பாடசாலை, தகவல்துறைசார் பாட-சாலை அனுமதி பெறுவதற்குரிய தகைமைகள் பற்றிய தகவல்களுக்கு தலைப்பு „Mittelschule (Sekundarschule II)" பார்க்கவும்.

## உள்வாங்கப்பட்ட விசேடபயிற்சிமுறைக்கல்வி ∴ மேற்பிரிவின் சிறியஊக்க வகுப்பு

அதிகமான பாடசாலைகளில் உள்வாங்கப்பட்ட விசேடபயிற்சி வகுப்புகள் உள்ளன. அதன் அர்த்தம் என்னவெனில் படிப்பதில் சிரமமுள்ள சாதாரணவகுப்- பிற்குப் போகும் இளம்பராயத்தவர்களுக்கு அங்கு விசேடபயிற்சிமுறைக்கல்வி புகட்டலில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்களால் பாடம் சொல்லிக்கொடுக்- கப்படும். தேவையேற்படும் பட்சத்தில் மாணவர்களுக்கு ஏற்றபடி ஊக்குவிக்கும் முகமாக தனிப்பட்ட முறையில் பாடத்திட்டமும் உருவாக்கப்படும்.
சில பாடசாலைகளில் படிப்பதில் சிரமங்களுள்ள பிள்ளைகளுக்காக சிறிய ஊக்கவகுப்புகள் உள்ளன. இங்குள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை சாதாரண வகுப்பைவிட குறைவானது. இங்குள்ள பிள்ளைகளுக்கு தரமான பொதுக்கல்வியும் அவரவர் திறமைக்கேற்ற தொழிற்பயிற்சிக்கும் ஆயத்தம் செய்யப்படும்.

## மேற்பிரிவின் கடைசி வருடத்தில் உள்ள விசேட வகுப்புகள்

**தொழில் தெரிவுசெய்யும் வருடம் (Berufswahljahr BWJ)**

மாணவர்கள் ஒரு தொழில்துறையைத் தெரிவு செய்து அதற்குரிய தொழில் பழகும் வெற்றிடங்களைக் கண்டுபிடிப்பதற்கு மற்றவர்களின் கூடுதலான உதவி தேவைப்படும் வருடமாகும். இங்கு மேற்பிரிவின் மூன்று உபபிரிவு மாணவர்களும அடங்குவர்..

**தொழில் வருடம் (Werkjahr WJ)**

மேற்பிரிவின் சிறிய ஊக்கவகுப்பிலுள்ள திறமையான மாணவர்களும் றியால் பாடசாலை மாணவர்களும் இங்கு கல்வி கற்கிறார்கள். தமக்கு இயலுமான தொழிற்கல்வியையோ அல்லது தொழிலையோ தேடிக் கொள்ளுவதற்கு இங்கு உதவி செய்யப்படும்.

**உள்வாங்கல் - மற்றும் தொழில் தேட உதவும் கல்வி (Integrations- und Berufsfindungsklasse IBK)**

தாமதமாக இடம்பெயர்ந்து வந்த வேற்றுமொழி பேசும் இளம்பராயத்தினர் ஆக்கூடியது 2 வருடங்களுக்குள் இங்கிருந்தால் IBK அவர்களை சமூகரீதியிலும் தொழில்ரீதியிலும் சுவிஸ் நாட்டின் உள்வாங்கலுக்குத் தயார்ப்படுத்தும். இங்கு டொச் மொழியும் பொதுக்கல்வியும் ஆழமாகக் கற்பிக்கப்படும். அவர்கள் இதன்மூலம் தமக்குத் தொழில் தேடுவதற்கும் தொழி-ல்வாழ்விற்கும் தீவிரமாகத் தயார் செய்யப்படுவார்கள்



# மேலதிக ஊக்குவிக்கும் நடைமுறைகள்

## தாய்மொழி டொச்மொழி அல்லாத பிள்ளைகளுக்கான வசதிகள்

**டொச்மொழி 2வது மொழியாகப் படிப்பித்தல் (Deutsch als Zweitsprache DaZ) (சிறுவர்பாடசாலை, ஆரம்பப்பாடசாலை, மேற்பிரிவு)**

தாய்மொழி டொச் அல்லாத வேற்றுமொழி பேசும் பிள்ளைகள் சிறுவர்பாடசாலையில் தினமும் மற்றப்பிள்ளைகளுடனும் ஆசிரியருடனும் சேர்ந்து பழகுவதன் மூலம் டொச்மொழிக்குப் பரிச்சயம் ஆகிறார்கள். ஒரு வகுப்பில் பல வேற்றுமொழி பேசும் பிள்ளைகள் இருப்பின் அவர்களுக்கு டொச்மொழி 2வது மொழியாக டொச்மொழிப்பாடம் எடுக்கப்படும். சிறுவர்பாடசாலை 2வது வருடத்தில் சுவிஸ் நாட்டிற்கு குடியேறினால் அவர்களுக்கு ஆரம்பப்பாடசாலையின் 1ம் வகுப்பில் டொச்மொழி ஆழமாகப் போதிக்கப்படும்.

வேற்றுமொழிப் பிள்ளைகள் ஆரம்பப்பாடசாலை அல்லது மேற்பிரிவில் இந்நாட்டிற்குள் குடியேறினால் அவர்களுக்கு 1 வருடகாலத்திற்கு டொச்மொழி ஆழமாகப் போதிக்கப்படும்.

சிறுவர்பாடசாலை முடிந்த பிள்ளைகள் ஆரம்பப்பாடசாலைக்குப் போகும்போதும் 2-3 வருடங்களுக்கு டொச்மொழி – துணைப்பாடமாகப் போதிக்கப்படும். இந்தவசதி கட்டாயப்-பாடசாலை வருடங்களில் எல்லாப் பிரிவுகளுக்கும் உரியதாகும்.

**தாய்மொழியும் கலாச்சாரமும் பற்றிய வகுப்பு (2ம் வகுப்புத் தொடக்கம்)**

இந்த வகுப்பு சுவிசிலுள்ள தாய்நாட்டுத் தூதரகம் பெற்றோர் சங்கங்களால் நடத்தப்படும். பிள்ளைகள் தம் தாய்மொழியைக் கற்பதற்கும் பெற்றோரின் தாய்நாட்டுக் கலாச்சாரம் பற்றி அறிந்து கொள்ளவும் இக் கல்வித்திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது.

இந்த வகுப்பில் பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோரே நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும். இவ் வகுப்புகள் பற்றிய மேலதிக தகவல்களைப் பெற தூதரகங்கள் பெற்றோர் சங்கங்களை நாடலாம்.

தகவல்: Sektion Entwicklung, Themenbereich Sprache und Migration, Tel. 062 835 21 18

தொடர்புநிலையங்களின் விலாசங்கள : www.ag.ch/bildung > Unterricht & Schulbetrieb > Schule & Interkulturel-les

## விசேட மொழிப்பாடம்


பேசுவதில் தடங்கலுள்ள பிள்ளைகளுக்கு மொழியும் பேச்சும் விசேட மொழிப்பாடம் மூலம் போதிக்கப்படும். இந்த வகுப்புக்கு பெற்றோர் கட்டணம் கட்டத் தேவையில்லை.

பெற்றோர் தகவல்களைப் பெற பாடசாலை நிர்வாகத்தினர் அல்லது இணையத்தளம் www.ag.ch/bildung > Sonderpädagogik & Förderangebote > Logopädie & Legasthenietherapie ல் பார்வையிடலாம்.

# மேற்பிரிவு II பற்றிய ஒரு கண்ணோட்டம்

மேற்பிரிவு II தொழிற்கல்வி, யிம்நாசியம், தொழில் துறைசார்கல்விப் பாடசாலை FMS, பொருளாதாரதுறைசார் பாடசாலை WMS, தகவல்துறைசார்கல்விப் பாடசாலை IMS என்பவற்றை உள்ளடக்கியது.

கீழுள்ள விளக்கம் அறோ மாநிலத்தில் மேற்பிரிவு II பற்றிய ஒரு கண்ணோட்டத்தைத் தருகிறது. இந்த வரைபை கீழிருந்து மேலாக வாசியுங்கள்.



# பாடசாலைக்குப் பின்புள்ள இடைப்பட்டசலுகைகள்

அதிகமான இளம்பராயத்தினர் பதினொரு வருடங்கள் பாடசாலையை முடித்துவிட்டு, தொழிற்கல்வி கற்கவோ அல்லது மேற்கல்வி கற்கவோ தொடங்குகின்றனர். சில இளம்பராயத்தினருக்கு தொழிற்கல்வி கற்பதற்கு, இன்னும் மேலதிக கவனிப்புத் தேவைப்படலாம். இவர்களுக்காகவே சில இடைக்காலத்தீர்வுகள் உள்ளன. இந்தத் தொடர்பு சலுகைகளாக மாநிலத் தொழிற்கல்விப் பாடசாலை (ksb) அல்லது பிரதேச தொழில் நடுவர் நிலையத்தின் (RAV) ஊக்கப்படுத்தும் தவணை (SEMO) உள்ளது .

## Brückenangebote மாநிலத் தொழிற்கல்விப் பாடசாலை

பாடசாலை மேற்பிரிவை முடித்த கல்வி – செயற்திறன் மிக்க பிள்ளைகள் தீவிரமாக ஒரு தொழில் அடிப்படைக்கல்விக்குத் தம்மைத் தயார்படுத்த விரும்பினால் அவர்களுக்குரிய தொடர்பு சலுகையாக மாநிலத் தொழிற்கல்விப் பாடசாலை (ksb) அமையும். இந்த 1 வருட பாடசாலைக் காலத்தில், பொதுவான பாடங்களில் தனிப்பட்ட முறையில், ஆழமான பொது அறிவைப் பெறுவது மட்டுமன்றி ஆளுமைக்குத் தேவைப்படும் ஊக்கத்தையும் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தையும் பெற்று மற்றும் தொழில் உலகுக்கும் சமூக கலாச்சாரத்திற்கும் பழகியும் கொள்வார்கள். இங்கு அவரவர்களுக்கேற்ற தொழிற்கல்வி பயிலுமிடங்கள் தேடிக் கொடுக்கவும் உதவி செய்யப்படும்.

## Motivationssemester

இந்த ஊக்கப்படுத்தும்தவணை (SEMO) தொழில் அற்ற இளைஞர்களை தொழிற்கல்வி பயிலுமிடம் தேடவும் அல்லது தொழில் உலகில் காலடி வைக்கவும் உதவும். அதனால் முதல் தொழில் அனுபவத்தையும் அதன் மூலம் தொழில் பற்றிய புதிய கண்ணோட்டத்தையும் பெறலாம். ஊக்கப்படுத்தும் தவணயில் படிப்பு. தொழிலுடன் விண்ணப்பம் எழுதவும் சொல்லித்தரப்படும். இவற்றைப் பிரதேச தொழில் நடுவர் நிலையமே (RAV) முன்னெடுக்கும். அதிகமாக இந்த ஊக்கப்படுத்தும் தவணையை ஏதாவது உதவி நி-றுவனங்களோ அன்றி மன்றங்களோ எடுத்து நடத்துவதும் உண்டு.

### விண்ணப்பம்

தொடர்புசலுகைகளுக்கும் ஊக்கப்படுத்தும் தவணைக்குமுரிய நுழைவாயில் Wegweiser தொடக்கநிலையம் ஆகும். பாடசாலை முடிந்து தொடர்ந்து எந்த முடிவுமற்ற இளைஞர்களைப் பாடசாலை இந்த வழிகாட்டும் தொடக்கநிலையத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் அவர்களுக்குப் பொருந்தக்கூடிய சலுகைகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

Departement Bildung, Kultur und Sport
Abteilung Berufsbildung und Mittelschule
Anlaufstelle Wegweiser
Kasinostrasse 29, Postfach 2254, 5001 Aarau
www.ag.ch/wegweiser
E-Mail: wegweiser@ag.ch, Tel. 062 835 41 40

# தொழிற்கல்வி (மேற்பிரிவுII)

## தொழில் சார்ந்த அடிப்படைக்கல்வி(Berufliche Grundbildung )

தொழில் சார்ந்த அடிப்படைக்கல்வி சுவிசில் முக்கியமான முதலாவது பயிற்சி வகுப்பாகும். இது இளம் பராயத்தினரை தொழில் உலகத்திற்குப் புகுத்துவதோடு தொழிலின் அடிப்படை நிலையை விபரிக்கிறது. ஒரு நிறுவனத்துடன் செய்யும் தொழில்முறைப்பயிற்சி மட்டுமன்றி கிழமைக்கு 1-2 நாட்களுக்கு தொழில் துறைசார் பாடசாலைக்கும் செல்லவேண்டும். இதற்கு தொழில் துறைக்கேற்றபடி 2 -4 வருடங்கள் வரை எடுக்கும்.

- ஒரு, மூன்று அல்லது நாலு வருட தொழில் அடிப்படைக்கல்வி கற்றால் அரச திறமைச் சான்றிதழ் (eidgenössischen Fähigkeitszeugnis EFZ) நோக்கி செல்லலாம்.
- ஒரு 2 வருட தொழில் அடிப்படைக்கல்வி கற்றால் அரச தொழில் சான்றிதழ் (eidgenössisches Berufsattest EBA) நோக்கி செல்லலாம்.

தொழில்கல்வி கற்று முடித்திருப்பது எதிர்காலத்தில் தொழிற்சந்தையில் என்றும் பாவிக்கக்கூடிய முக்கியமான தகுதியாகும். அதன் மூலம் பல தொழில் நோக்குகளும் கவர்ச்சியான உயர்கல்வி வாய்ப்புகளும் அமையலாம்.

அங்கீகரிக்கப்பட்ட தொழில் கல்வி கற்றுமுடித்திருந்தால் (அடிப்படை EFZஇலிருந்து) அல்லது (அடிப்படை EBA இலிருந்து) உயர் தொழில் கல்வி கற்க வாய்ப்புகள் உண்டு.

மேலதிக தகவல்களுக்கு : www.ag.ch/berufsbildung



## தொழில்சார் பாடசாலை (Berufsmittelschule)

தொழில் பயிற்சி பெற்ற திறமையுள்ள இளம்பராயத்தினர் மேலதிகமாக தொழில் சிறப்புப் பாடசாலையில் சிறப்புப் பாடம் கற்பதன் மூலம் அவர்கள் பயிற்சியை தொழில் புலமை (Berufsmaturität) பெற்று நிறைவு செய்யலாம்.

இதை நிறைவு செய்தவர்கள் இரட்டைத்தகைமை பெறுகிறார்கள் ஒருபுறம் அவர்கள் நிறைவு செய்த தொழில் கல்வியாளர்களாகவும், மறுபுறம் உயர் தொழில்கல்வி (Fachhochschule) கற்கச் செல்லக்கூடிய தகுதியையும் பெறுகிறார்கள்.

பெசிர்க், செக்குன்டார் பாடசாலை மாணவர்கள் தொழில்சார் பாடசாலைக்கு அனுமதி பெறுவதற்கு தனிபட்ட இறுதிப் பரீட்சையின்றி கடைசி பாடசாலை வருட சராசரி புள்ளிகளைக் கருத்தில் கொண்டு அல்லது முன்னனுமதிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவார்.

மேலதிக தகவல்களுக்கு தொழில்சார் பாடசாலை அனுமதிக்குரிய தகைமைகள்: www.ag.ch/mitelschulen பார்க்கவும்

தொழில்கல்வி மற்றும் ஆலோசனைகளுக்கு தொழில்- மற்றும் தொடர்கல்வி ஆலோசனை நிலையங்களை நாடலாம்.



# துறைசார் பாடசாலைகள் (Sekundarstufe II)

11 கட்டாயப் பாடசாலை வருடங்களைத் தொடர்ந்து வருவது துறைசார் பாடசாலைகள் ஆகும் நீங்கள் படிக்கும் பாடசாலை உபபிரிவுகளைப் பொறுத்தே வித்தியாசமான புலமைக்கல்வியும் அதற்கேற்ப உயர்தொழில்நுட்பகல்லூரி அதியுயர் தொழில் கல்லூரி பல்கலைக்கழகங்களிலும் படிக்கலாம்.

## தொழில்துறைசார் கல்லூரி (Fachmittelschule FMS) யும் தொழில்புலமையும் (Fachmaturität FM)

தொழில்துறைசார் கல்லூரி குறிப்பிட்ட தொழில் சார்பான படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. அறோ மாநிலத்தில் 4 வகையான தொழில்துறைகள் உள்ளன. வளர்ப்பும் நிலைப்படுத்தலும், சுகாதாரம், சமூகசேவை, மற்றும் தகவல் தொடர்புகள். இக்கல்வி படிக்க 3 வருடங்கள் எடுக்கும். அதன்முடிவில் முழு சுவிசுக்கும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்துறைசார்கல்வி சான்றிதழ் பெறலாம். அதனைத் தொடர்ந்து தொழில் புலமைக்கும் படிக்கலாம். அதன்மூலம் உயர் தொழில்நுட்பக்கல்லூரிகளில் விருப்பமான தொழில்-துறைகளுக்கும் செல்லுவதற்கான வழிகிடைக்கும்.

## பொருளாதாரதுறைசார் பாடசாலை (Wirtschaftsmittelschule WMS)

பொருளாதாரதுறைசார் பாடசாலை வர்த்தகம் சம்பந்தமான தொழில்துறைகளை உருவாக்குகிறது. முதல் 3 வருடங்களுள் ஒரு பகுதி பாடசாலையிலும் மீதி ஒரு நி-றுவனத்திலும் பயிற்சிஎடுத்து சித்தியடைந்தால் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகத் திறமைச்சான்றிதழும்
(Eidgenössisches Fähigkeitszeugnis EFZ Kaufmann/Kauffrau) நிர்வாகத்தில் தொழில் புலமையும் (kaufmännische Berufsmaturität) பெறலாம். இதன்பின்பு துறைசார் உயர்கல்லூரியிலோ பாசரல் படிக்கவோ சந்தர்ப்பம் உண்டு.

## தகவல்துறைசார் பாடசாலை (Informatikmittelschule IMS)

இந்த தகவல்துறைசார் பாடசாலை பொதுவான கல்வி தகவல்கல்வி மற்றும் நிர்வாகத் தொழ-ில்கல்வியையும் சேர்த்தே உள்ளடக்கியது. 3 வருடங்கள் பாடசாலை முடிவில் 4 வது வருடம் ஒரு நிறுவனத்தில் தொழில் பயிற்சி பெற்ற பின்பு மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் திறமைச்சான்றிதழ் (Eidgenössische Fähigkeitszeugnis EFZ Informatiker / Informatikerin) பெறலாம். இதன் மூலம் நிர்வாகத்தில் தொழில் புலமை அடையவும் வாய்ப்புகள் உண்டு. இதன் பின்பு துறைசார் உயர்கல்லூரியில் படிக்கவும் பாசரல் படிக்கவும் சந்தர்ப்பம் உண்டு.

## FMS / WMS / IMS கற்பதற்கான அடிப்படைத்தகுதிகள்

பெசிர்க், செக்குன்டார் பாடசாலை மாணவர்கள் தொழில்துறைசார், பொருளாதாரதுறைசார், தவகல்துறைசார் பாடசாலைக்கு அனுமதி பெறுவதற்கு தனிபட்ட இறுதிப் பரீட்சையின்றி கடைசி பாடசாலை வருட சராசரி புள்ளிகளைக் கருத்தில் கொண்டு அல்லது முன்னனுமதிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவார்.

மேலதிக தகவல்களுக்கு தொழில்துறைசார், பொருளாதாரதுறைசார், தகவல்துறைசார் பாடசாலை அனுமதிக்குரிய தகைமைகள்: www.ag.ch/mitelschulen பார்க்கவும்

## யிம்நாசியம் (Gymnasium)

அறோ மாநிலத்தில் உள்ள 6 யிம்நாசியங்களில் தான் 4 வருடங்கள் படித்து அதன்மூலம் மத்திய அரசின் அங்கீகாரமுள்ள புலமைச்சித்திகள் (Maturität) பெறலாம். இதன் மூலம் சுவிஸ் உயர்கல்லூரியில் பரீட்சை இன்றி அனுமதி பெறலாம். மருத்துவம் படிக்க விரும்புபவர்கள் மேலதிகமான திறமையை மதிப்பிடும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

பெசீர்க் பாடசாலை பிள்ளைகள் யிம்நாசியத்திற்கு தனிப்பட்ட இறுதிப் பரீட்சையின்றி அனுமதி பெறுவதற்கு கடைசி வருட சராசரி புள்ளிகள் அடிப்படையில் அனுமதி பெறலாம். பெசீர்க் பாடசாலை முடித்தவர்கள் அடுத்த வருடம் முன்னனுமதிப் பரீட்சை எழுதியும் யிம்நாசியத்துக்கு போவதற்கும் வசதி உண்டு.

மேலதிக தகவல்களுக்கு யிம்நாசியம் அனுமதிக்குரிய தகைமைகள்: www.ag.ch/mitelschulen பார்க்கவும்

## பாசரல் (Passerelle)

திறமையான முறையில் தொழில் புலமைச்சித்தி பெற்ற மாணவர்கள் ஒரு மாற்றுப்பரீட்சை எழுதுவதன் மூலம் சுவிஸின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் உயர்கல்லூரிகளில் நுழைவதற்கு உரிய முறையே பாசரல் ஆகும். மாற்றுப்பரீட்சையில் சித்தி பெற்றாலும் அது யிம்நாசியப் புலமைச்சித்திக்கு ஒத்ததல்ல. இந்த மாற்றுப்பரீட்சைச் சித்தியுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறமுடியாது.

## பெரியவர்களுக்கான அறோமாநில புலமைக்கல்லூரி AME

பெரியவர்களுக்கான அறோமாநிலப் புலமைக்கல்லூரியில் தொழில் செய்தபடியே படிக்கலாம். இந்த அரசால் அங்கீகரிக்கப்பட்ட யிம்நாசிய புலமைச்சித்திபெற மூன்றரை வருடங்கள் எடுக்கும். சுவிசில் தொழில்கல்வி முடித்தவர்கள் அல்லது 3 வருடங்கள் தொழில் செய்தவர்கள் இங்கு கல்வி கற்கலாம். இங்கு படிப்பதற்கு ஆகக்குறைந்த வயது 20. இந்தப் பாடசாலையில் தொழில் செய்துகொண்டே கிழமையில் 2 நாட்கள் கற்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு : www.ame.ch



# ஆலோசனைப்பிரிவு

## பாடசாலை மனோதத்துவப்பிரிவு

இந்த மனோதத்துவப்பிரிவு சிறுவர்பாடசாலை தொடக்கம் மேற்பிரிவு கடைசி வரையுள்ள சிறுவர்களுக்கும் இளம்பராயத்தினருக்கும் அவர்களைக் கவனிக்கும் பொறுப்பானவர்களுக்கும் உரியது.

பாடசாலை மனோதத்துவப்பிரிவில் கீழுள்ள காரணங்களுக்காக ஆலோசனை நாடலாம். :

- பிள்ளை வகுப்பில் சராசரித் திறமைக்கு அதிகூடுதலாகவோ அல்லது அதிகுறைவாகவோ இருப்பின்
- பிள்ளையின் திறனில் பிரச்சினை இருப்பின்,
- பிள்ளையின் நடத்தையில் தடங்கல்கள் அல்லது திடீர் மாற்றங்கள் தென்படின்,
- குறைபாடுள்ள பிள்ளையை ஒரு விசேட பாடசாலைக்கோ அல்லது சாதாரண வகுப்புக்கோ மாற்றி விடும்போது,
- பெற்றோர் ஆசிரியர் பிள்ளைக்கிடையில் பிரச்சினைகள் வரும்போது,
- பெற்றோர் பிள்ளையின் வளர்ச்சி நிலை பற்றி அறிய விரும்பினால (உ +மாக பயம், கோபம், நிதானக்குறைவு)
- பிள்ளை வீட்டில் வன்முறையைச் சந்தித்தால்
- இந்தப் பாடசாலை மனோதத்துவப்பிரிவு ஆலோசனை பெறுபவர்களுக்கு இலவசமானது.

ஏதாவது பிரச்சனைகள் அல்லது கேள்விகள் இருப்பின் பெற்றோர் / பிள்ளையின் பொறுப்பாளர் மற்றும் 14 வயதிற்கு மேற்பட்ட இளம்பராயத்தினர் தொலைபேசி மூலமோ அன்றி விண்ணப்பப்படிவம் மூலமோ நேரடியாகவே மனோதத்துவப்பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம்.

ஆசிரியரோ அல்லது வேறு மூன்றாவது நபரோ பிள்ளைகளின் பெற்றோருடைய கையெழுத்து அனுமதி பெற்ற பின்பே விண்ணப்பிக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு : www.ag.ch/schulpsychologie
E-Mail: sp.volksschule@ag.ch

Regionalstellen des Schulpsychologischen Dienstes:
Aarau: E-Mail: spd.aarau@ag.ch, Tel. 062 835 40 00
Bad Zurzach: E-Mail: spd.zurzach@ag.ch, Tel. 062 835 41 00
Baden: E-Mail: spd.baden@ag.ch, Tel. 062 835 40 20
Rheinfelden: E-Mail: spd.rheinfelden@ag.ch, Tel. 062 835 40 40
Wohlen: E-Mail: spd.wohlen@ag.ch, Tel. 062 835 40 60
Zofingen: E-Mail: spd.zofingen@ag.ch, Tel. 062 835 40 90

## சிறுவர் - இளம்பராயத்தினர் மனநலப்பிரிவு

சிறுவர் - இளம்பராயத்தினர் மனநலப்பிரிவு வைத்தியரின் கீழ் செயற்படும் இடமாகும். இங்கு பிள்ளைகளும் இளம்பராயத்தினரும் பாடசாலைக்குப் போகத் தொடங்க முன்போ அல்லது பாடசாலைக்குப் போகும் போதோ மனநிலையில் மாற்றங்கள் இருப்பின் அதைக் கண்டுபிடித்து கையாண்டு கவனிக்கப்படுவார்கள். இங்கு பெற்றோர்களோ அல்லது இளம்பராயத்தினர் தாமாகவோ அல்லது சிறுவர் - பெரியோர் பாதுகாப்புப் பிரிவினரோ சென்று முறையிடலாம். மற்றவர்கள் விண்ணப்பித்தாலும் பெற்றோரின் அனுமதி பெறவேண்டும்.

பிரதேச வெளிநோயாளர் சிறுவர் - இளம்பராயத்தினர் மனநலப்பிரிவு Aarau, Baden, Rheinfelden, Wohlen ஆகிய இடங்களிலுள்ளது.

தகவல்களுக்கும் பதிவதற்கும் :

திங்கள் தொடக்கம் வெள்ளி , 8–12 மணி மற்றும் 13.30–17.30 மணி, அவசரத்திற்கு 24 மணி நேரமும் 365 நாட்களும்

Kinder- und Jugendpsychiatrischer Dienst
Zentrales Ambulatorium für Kinder und Jugendliche ZAKJ
Postfach 432, 5201 Brugg
Internet: www.pdag.ch
E-Mail: kipd.zakj@pdag.ch, Tel. 056 462 21 20



## ask! – கல்வி கற்றல் மற்றும் தொழில் பற்றிய ஆலோசனைப்பிரிவு அறோ

இந்த அறோ ஆலோசனைப்பிரிவு (Beratungsdienste Aargau(BDAG) ஒருவரது தனிப்பட்ட அல்லது தொழில் ரீதியான முன்னேற்றத்திற்கு ஊக்குவித்து உதவும். இந்த ஆலோசனை அறோ மாநிலத்தில் வசிப்பவர்களுக்கும் இங்கு கற்பவர்களுக்கும் இலவசமானது.

தொழில் அல்லது பாடசாலைத்தெரிவு இ தொழில்சார் அடிப்படைக்கல்வி, துறைசார் பாடசாலை, தொழில் உயர்கல்வி, தொழில் வாழ்க்கை, தொழில்சந்தை பற்றிய விடயங்களுக்குத் தேவையான தகவல்களை கீழுள்ள ஆறு ஆலோசனை நிலையங்களிலும் அல்லது இணையத்தளத்திலும் அறிந்துகொள்ளலாம்.

இங்கு தனிப்பட்ட ஆலோசனையை விட இளம்பராயத்தினர்களுக்கும் பெற்றோருக்குமுரிய தகவல் நிகழ்ச்சிகளும் அதிகம் நடக்கும். வேற்றுமொழி பேசும் பெற்றோர்கள் அவரவர்கள் தாய்மொழியில் விளங்கிக் கொள்ளக்கூடிய வசதிகளும் உண்டு.

அனைத்து வசதிகளுக்கும் உரிய தகவல்களுக்கு : www.bdag.ch

தகவல் நிலையங்களின் தொடர்புகளுக்கு :
Aarau: E-Mail: blb@bdag.ch, Tel. 062 832 64 10
Baden: E-Mail: baden@bdag.ch, Tel. 062 832 65 10
Bad Zurzach: E-Mail: zurzach@bdag.ch, Tel. 062 832 65 60
Rheinfelden: E-Mail: rheinfelden@bdag.ch, Tel. 062 832 65 50
Wohlen: E-Mail: wohlen@bdag.ch, Tel. 062 832 65 70
Zofingen: E-Mail: zofingen@bdag.ch, Tel. 062 832 64 80

## விசேடநிபுணர் குழு 1155 (Fachstelle Team 1155)

இந்த நிபுணர் குழு 1155 தொழில் கற்குமிடம் கிடைக்காத இளையவர்களுக்கும் - பாடசாலை முடித்து உயர்கல்வி கிடைக்காதவர்களுக்கும் உதவிசெய்யும். இந்த வசதி இலவசமானது. நம்பகமானது.

வசதிக்குரிய தகவல்களுக்கு : www.1155.ch
E-Mail: 1155@ag.ch, Tel. 0800 1155 00 (இலவசம்)

**Departement**
**Bildung, Kultur und Sport**

Abteilung Volksschule
Bachstrasse 15
5001 Aarau

யூன் 2016